# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1458/2 - 2006 අගෝස්තු 14 වැනි සඳුදා - 2006.08.14

*1458/2 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டுஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு

இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு

*1419/ 3 ஆம் இலக்க, 2005.11.14 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு பற்றிய வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்களை செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

| *பிரிவு இல.* | *பிரிவு* | *திருத்தம்* |
|---|---|---|
| *1.* | நடைமுறைப்படுத்தப்படும் திகதி | இங்கு "*3 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் 2005.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதன் கீழ்*" எனும் பகுதியை நீக்கிவிட்டு அப்பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகிறது.<br><br>*1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1988, மே மாதம் 27 ஆம் திகதிய இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அப்பிரமாணக் குறிப்பை இடையிடையே திருத்தி வெளியிடப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகளின்படி எடுக்கப்பட்ட அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் நடவடிக்கையை பாதியாதவாறு இப் பிரமாணக் குறிப்பை 2005.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.* |
| *2.* | வரைவிலக்கணம் | "சேவை" என்பதற்கு கீழ் பின்வரும் வரைவிலக்கணங்கள் புதிதாக சேர்க்கப்படுகின்றன.<br><br>"முனப்பான சேவைக்காலம்" எனக் கருதப்படுவது ஏதேனும் ஒரு சேவையில்/பதவியில் பௌதீக ரீதியில் கடமையை பொறுப்பேற்ற பின் ஆரம்பமாகும் சேவைக்காலமாகும். (நியமனம் ஒன்றை முற்றேதி இட்ட காலமாக இருப்பின் அல்லது முற்பட்ட திகதி ஒன்றில் இருந்து நடைமுறைப்படும் வண்ணம் வழங்கப்பட்ட ஒரு நியமனமாயின் அக்காலம் முனைப்பான சேவையாகக் கணக்கெடுக்கப்படமாட்டாது. |

| பிரிவு இல. | பிரிவு | திருத்தம் |
|---|---|---|
| | | "திருப்திகரமான சேவை" எனக் கருதப்படுவது உரிய காலத்திற்குள் எல்லா சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றும் அக்காலத்திற்குள் புரியப்பட்ட ஏதேனும் குற்றத்திற்காக எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்று தண்டனைக்கு ஆளாகாமலும் இருக்கும் சேவைக்காலமாகும். |
| 11. | மொழித் தேர்ச்சி | பிரிவு 11 ஐ பின்வருமாறு திருத்தி கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.<br><br>11 அரசகரும மொழி மற்றும் இணைப்பு மொழித் தேர்ச்சி :<br><br>(i) சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் நியமனத் திகதி முதல் ஆறு வருடங்களுக்குள் இணைப்பு மொழி பற்றிய பரீட்சையில் சித்தி பெற வேண்டும். சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் உட்சேர்ந்த அலுவலர்கள் இணைப்பு மொழி ஆங்கிலமாகும்.<br><br>(ii) ஆங்கில மொழி மூலம் சேவைக்குச் சேர்ந்த அலுவலர் ஒருவர் ஓர் அரச கரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் நிலை காலத்திற்குள்ளும், மற்றைய அரச கரும மொழித் தேர்ச்சியை 6 வருடங்களுக்குள்ளும் பெற்றுக்கொள்ள வேண்டும்.<br><br>(iii) ஓர் அரச கரும மொழியில் சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தகுதிகாண் நிலைக் காலத்திற்குள் மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.<br><br>குறிப்பு:-<br><br>1. க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் உரிய விருப்பத்திற்குரிய மொழிப்பாடமொன்றில் சித்தி அடைந்துள்ள அல்லது அரச கரும மொழி ஆணையாளரால் அதற்குச் சமமானதென ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு சான்றிதழ் பெற்றுள்ள அலுவலர்கள் அரச கரும மொழித் தேர்ச்சி பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.<br><br>2. க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் சித்தியடைந்துள்ள அலுவலர்கள் இணைப்புமொழித் தேர்சி பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |
| 12. | வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | பிரிவு 12 க்கு பின்வரும் உட்பிரிவு உள்ளடக்கப்படுகிறது<br><br>12 (iii) உரிய காலத்திற்குள் 1 ஆம், 2 ஆம் வினைத்திறமை காண் தடைகளில் சித்தியடைந்து, இணைப்பு மொழி மற்றும் 11 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள மொழித் தேவைகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு 4 சம்பள ஏற்றங்களை வழங்கி உரிய சம்பளப்படி நிலையில் அமர்த்தப்படும். |
| 17. | இடைக்கால ஏற்பாடுகள் | பிரிவு 17 பின்வருமாறு திருத்தப்படுகிறது.<br><br>பிரமாணக் குறிப்பை நடைமுறைப்படுத்தும் போது 2010.12.31 வரையிலான காலம் இடைக்காலமாக கருதப்படும். அக்காலத்திற்குள் பின்வருமாறு பதவி உயர்வுகள் நடைமுறைப்படுத்தப்படும். |
| 17(அ) 1. | | பிரிவு 17 இன் 17 (அ), 17 (அ) (1) மற்றும் 17 (அ) (2) பின்வருமாறு திருத்தப்படுகிறது.<br><br>17 (அ) வகுப்பு 11 க்கு பதவி உயர்த்தல் . |

| *பிரிவு இல.* | *பிரிவு* | *திருத்தம்* |
|---|---|---|
| *17(அ) 2.* | | *17 (அ) (1) மற்றும் (2) பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*<br>*(1) 14 மற்றும் 15 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள பதவியுயர்வு முறைகளை 2011.01.01 ஆம் திகதி முதல் பூரணமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.*<br>*(2) அன்று வரை பதவியுயர்வுகளை பின்வருமாறு மேற்கொள்ள வேண்டும்.*<br>*17 (ஆ1) (iv) மற்றும் (v) க்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு 17 (iv) ஆக பதிலீடு செய்யப்படுகின்றது.*<br>*17 (iv) தகைமை அடைவதற்கு உரிய திகதிக்கு உடன்முந்திய 5 வருட காலப் பகுதிக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்கின்ற அலுவலர்கள் தகைமை அடைவார்கள்.* |
| *17(ஆ)* | *வகுப்பு 1 க்கு பதவி உயர்த்தல்* | *பிரிவு 17 (ஆ) பின்வருமாறு திருத்தப்படுகிறது.*<br>*2010.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்கின்ற பதவியுயர்வுகளுக்காக உரிய திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்கின்ற அலுவலர்கள் தகைமை அடைவார்கள்.* |
| *19* | | *19 ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்படுகிறது.*<br>*உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களுககு ஏற்புடையதாகும் நிபந்தனைகள் :*<br>*இலங்கை நிர்வாக சேவை பிரமாணத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்ற 2010.12.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யும் வயதை அல்லது விருப்புடன் ஓய்வுபெறும் வயதை அடைந்ததன் பேரில் ஓய்வு பெறுகின்ற அலுவலர்கள் தவிர்ந்த மற்றைய அலவலர்கள் தொடர்பில் பின்வரும் நிபந்தனைகள் வலுவில் இருக்கும்.*<br>*(1) பிரமாணத்தின் பிரிவு 18 (11) இன்கீழ் சேவையில் வகுப்பு 1 க்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்றவர்களும் பிரிவு 17 (ஆ) வின் கீழ் பதவியுயர்வு பெறுகின்றவர்களுமான அலுவலர்கள் 2011.01.01 ஆம் திகதிக்கு முன் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.*<br>*(அ) இப் பிரமாணத்தின் 14 (1) (இ) பந்தியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது*<br>*(ஆ) செயலாளரின் ஆலோசனைப்படி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளருடன் ஏற்கனவே உடன்பட்டுக்கொண்ட வாறு அரசாங்க நிர்வாகம், முகாமை, அரச கொள்கை, பொருளியல் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய பாடத் துறைகளுக்கு உரியதாக ஒரு எழுத்திலான ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் நியமிக்கப்படுகின்ற ஒரு நடுவர் குழுவின் முன்னிலையில் தொடர்புடைய அலுவலர் குறித்த ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும்.* |

| பிரிவு இல. | பிரிவு | திருத்தம் |
|---|---|---|

2. 2 பிரமாணத்தின் பிரிவு 18 (111) இன்கீழ் சேவையில் வகுப்பு 11 க்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்றவர்களும் பிரிவு 17 (அ1) இன் கீழ் இடைக்காலத்திற்குள் பதவியுயர்த்தப்படுகின்றவர்களுமான அலுவலர்கள் 2011.01.01 ஆம் திகதிக்கு முன் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) அரசாங்க நிர்வாகம், முகாமை, அரச கொள்கை, பொருளியல் மற்றும் சமூக அபிவிருத்தி பற்றிய பட்டநிலை பின்படிப்புப்பட்ட டிப்ளோமா ஒன்றை பூர்த்தி செய்தல் ; அல்லது

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதற்குச் சமமானதென எற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு தகைமையை பூர்த்தி செய்தல்.

3. பிரமாணத்தின் பிரிவு 18 (iv) இன்கீழ் சேவையின் வகுப்பு III க்கு உள்ளீர்க்கப்படுகின்ற அலுவலர்கள் 2011.01.01 ஆம் திகதிக்கு முன் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

பொதுமுகாமை பாடநெறி அடங்கலாக பிரமாணத்தின் 9 (2) (அ) (1) இன் கீழ் பயிற்சி பாட நெறிகள் 4 இனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.

பொதுமுகாமை பாடநெறி வருங்காலத்தில் தேவைப்படமாட்டாது.

இடைக்காலத்திற்குள் பிரிவு 17 (அ1) வின் கீழ் பதவியுயர்வுகளை எதிர்பார்க்கும் அலுவலர்கள் மட்டும் பொதுமுகாமை பாடநெறியை வெற்றிகரமாக முடிவுறுத்த வேண்டும்.

எச். டி. எல். குணவர்த்தன,
செயலாளர்,
ஆரசாங்க சேவை ஆணைக்குழு.

9-38

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.